www.padippakam.com



# ஈழத்தவர் வரலாறு

## கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 1621ஆம் ஆண்டு வரை....

-செங்கை ஆழியான்-

### துட்டகாமினி

எல்லாளனின் ஏகாதிபத்தியம் இலங்கை முழுவதும் பரவியிருந்தது. கல்யாணி, உருகுணை ஆகிய இரு தென்னிலங்கைச் சிற்றரசுகள் எல்லாளனின் ஆட்சியை ஏற்றிருந்தன. கல்யாணி இராசதானியின் மன்னனான களனி தீசனும் உருகுணையின் மன்னனான காக்க வண்ணதீசனும் எல்லாளனின் மேலாதிக்கத்தை ஏற்று திறை செலுத்தி வந்தனர். காக்க வண்ணதீசனின் அரச பரம்பரையை தேவநம்பிய தீசனின் பரம்பரையோடு பிணைப்பதற்குப் பாளி நூல்கள் முயல்கின்றன.

தேவநம்பிய தீசனின் சகோதரன் மகாநாகன் அனுராதபுரத்தின் சிம்மாசனத்திற்குரிமையுடைய இளவரசனாவான்.


அனுராதபுரத்தின் மணிமகுடம் தனது கணவனுக்குப் பின்னர் தனது மகனுக்கு வரவேண்டும் என்று கருதிய தேவநம்பிய தீசனின் மனைவி, நஞ்சூட்டப்பட்ட மாங்கனி ஒன்றினை மாங்கனிகள் நிரம்பிய தட்டொன்றில் மிக மேற்கனியாக அடுக்கி மாநாகனுக்கு அனுப்பி வைத்தாள். அந்த நஞ்சூட்டப்பட்ட கனியை அவ்வேளை மகாநாகனோடு நின்றிருந்த அவளது மகனே உண்டு இறக்க நேர்ந்தது. இந்தத் துர்மரணத்தினால் பயமுற்ற மகாநாகன் தனது மனைவி மக்களுடன் உருகுணைக்குத் தப்பியோட நேர்ந்தது. அங்கு மகாகமம் என்ற நகரத்தை உருவாக்கி உருகுணையின் மன்னனாகினான். அவனைத் தொடர்ந்து அவனது மகன் ஜத்தலாயா தீசனும், அதன் பின் அவனது மகன் கோதபயனும் உருகுணையின் மன்னனராகினர். இவர்கள் பெரும் போராட்டத்தின் பின்னரே உருகுணையின் அரசராக முடிந்தது. கதிர்காமப் பிரதேசத்தின் சத்திரிய தமிழ் மன்னர்கள் பத்துப்பேரை அழித்து வெற்றி கொள்ள வேண்டியிருந்தது. தட்டுவம்சம் என்ற நூலின் படி இந்த சத்திரிய மன்னர்களை கோதபாயனே அழித்து வெற்றி கொண்டான் என்பதாகும்.

அனுராதபுரத்திலிருந்து தண்டனைக்குப் பயந்து தப்பியோடி வந்த மகாநாகனுக்கு தஞ்சமளித்த கதிர்காமக்குறுநில மன்னன் கமணியையும் அவனது பத்துப் பிள்ளைகளையும் அழித்து உருகுணையின் இரசாதானியைக் காக்க வண்ணதீசனின் தந்தை கோபாயன் தனதாக்கிக் கொண்டான். சத்திரிய மன்னர்கள் பத்துப் பேரையும் அழித்த போதிலும் கதிர்காமப் பகுதியில் அவர்களது ஆதிக்கம் சிறிதளவில் இருந்துள்ளது. பத்துச் சத்திரிய மன்னர்களில் மூத்தவனின் மகனான தர்மராஜா என்பவனின் மகன் மகாதீசன் என்பவன் இலங்கையின் தென்கிழக்குப் பகுதியில் ஆதிக்கம் பெற்றிருந்துள்ளான். சத்திரிய மன்னன் ஒருவனின் மகளான இளவரசி அபி அனுரதி பற்றி பிராமிக் கல்வெட்டொன்றில் குறிப்புள்ளது.

எவ்வாறாயினும் தென்னிலங்கையில் காக்க வண்ணதீசனின் காலத்தில் உருகுணை ஓரளவு வலிமையுடைய இராசதானியாக விளங்கியுள்ளது. ஈழராஜா எல்லாளனின் மேலாதிக்கத்தையேற்று திறை செலுத்தி வந்தமையால், தமிழ் மன்னன் இதன் நிர்வாகத்தில் தலையீடு செய்யாதிருந்தான்.

காக்கவண்ணதீசனின் பட்டத்து ராணி, களனி தீசனின் மகள் விகாரைமகா தேவியாவாள். இவளைக் காக்கவண்ணதீசன் மணந்த வரலாறு சுவையானது. களனிதாசனின் மனைவிக்கும் அவனது தம்பியான அய்ய உத்திகனுக்கும் கள்ள உறவு இருந்தது. இந்த உறவு மன்னனுக்கு தெரிந்ததும் உத்திகன் பயந்து நாட்டை விட்டோடினான். பின்னர் தமையனின் மனைவிக்கு ஒரு காதல் கடிதம் எழுதி பிக்குவேடம் அணிந்த ஒருவனிடம் கையளித்து, அதனை அரசியிடம் சேர்ப்பிக்கும் மார்க்கத்தையும் கூறினான். ஒவ்வொரு நாளும் அரண்மனைக்குப பிச்சையேற்க செல்லும் தேரர் பின்னால் செல்லும் பிக்குகளுடன் சென்ற பிக்குவேடமணிந்தவன், கடிதத்தை அரசியின் முன் தருணம் பார்த்து நழுவவிட்டபோது, அதனைக் கண்ணுற்ற களனிதீசன் கடிதத்தை எடுத்துப்படிக்க நேர்ந்தது. கோபமுற்ற மன்னன், பிரதம தேரர், வேடமணிந்த பிக்கு இருவரையும் கொன்று கடலில் வீசுவித்தான். அதனால் கடல் பொங்கிக் கல்யாணி மீது பரவியது. அதனைச் சாந்தப்படுத்துவதற்காக தனது மகள் மகாதேவியை ஒரு வள்ளத்தில் ஏற்றிக் கடலில் விட்டு கடலிற்கு காணிக்கையாக்கினான். அந்த வள்ளம் மகாகமத்தின் கரையைச்சென்றடைந்தது. அவள் யாரெனக் கண்டு கொண்ட காக்கவண்ணதீசன், மகாதேவியைத் தனது பட்டத்து ராணியாக்கிக் கொண்டான். அவள் கரையொதுங்கியவிடம் விகாரையொன்றுக்கு அருகாக இருந்தமையால், விகாரைமகாதேவி என அழைக்கப்பட்டாள். மகாவம்சம் கூறுகின்ற இக்கதைகள் எவ்வளவு தூரம் சிங்கள இராஜபரம்பரைக்குப் பெருமை சேர்க்கின்றதோ அல்லது அபகீர்த்தியுண்டாக்குகின்றதோ என்பதை விட இக்கதைகளின் நம்பகத்தன்மை நிரூபிக்கப்படாத ஒன்று.

மகாவம்சத்தின் ஆசிரியரான மகாநாமதேரர், துட்டகாமினியைத் தனது நூலின் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டுள்ளார். அவனது வரலாற்றை விபரிக்கும் போது இரு அம்சங்களை வலியுறுத்தியுள்ளார். ஒன்று தமிழருக்கு எதிரான இனவாதக் கருத்துக்கள், மற்றையது பௌத்தத்திற்கு அவனாற்றிய சேவை. விகாரமகாதேவி துட்டகாமினியைக் கருவில் கொண்டிருந்த போது அவளுக்கு ஏற்பட்ட ஆசைகள் பற்றி மகாவம்சம் விபரிக்கின்றது. பெருந்தொகையான பிக்குகளுக்கு வழங்கித் தானும் பருகக்கூடிய பெரியதொரு தேன் அடை வேண்டும் என்பது அவளது முதலாசை. ஈழராஜா எல்லாளனின் முதலாவது படைத்தளபதி ஒருவனின் தலையைச் சீவிய இரத்தம் தோய்ந்த வாளினைக் கழுவிய நீரை அருந்தவேண்டும் என்பது அவளது இரண்டாவது ஆசை. அனுராதபுரத்தின் வாடாத தாமரைகளால் மாலைகட்டி அணியவேண்டும் என்பது அவளது மூன்றாவது ஆசை. இந்த மசக்கை ஆசைகள் நிறைவேற்றப்பட்டன. காக்கவண்ணதீசனின் நம்பிக்கைக்குரிய படைத்தளபதி வேலுசுமண என்பவன் விகாரைமகாதேவியின் இரண்டாவது விருப்பத்தை நிறைவேற்ற அனுராதபுரத்திற்கு அனுப்பப்பட்டான். அவன் தனது வாளினைக் கதம்ப நதிக்கரையில் மறைத்து விட்டு அரண்மனைக்குச் சென்று குதிரைகளைப் பராமரிக்கும் பணியில் சேர்ந்து கொண்டான். ஒருநாள் வாகா என்ற அரச குதிரையைப் பிறர் அறியத்தக்கதாக கடத்திக் கொண்டு புறப்பட்டான். இதனையறிந்த எல்லாளனின் படைத்தளபதி நந்தசாரதி, அவனைக் கைப்பற்றக் கருதி தனது குதிரையில் விரைந்தான். காட்டிற்குள் மறைந்து நின்ற வேலுசுமண, நந்தசாரதி குதிரையில் வேகமாக நெருங்கியதும் தலையைச் சீவினான். நந்தசாரதியின் தலையுடன் இரத்தம் தோய்ந்தவாளை உருகுணைக்கு எடுத்து வந்து, விகாரமகாதேவியின் விருப்பத்தைப் பூர்த்தி செய்தான். சீலமயமான வாழ்க்கையொன்றை மேற்கொண்ட விகாரமகாதேவிக்கு இப்படியான குரூர ஆசைத்தனம் ஏற்பட்டதென்று மகாவம்சம் குறிப்பிடுவதன் மூலம் அவளின் பாத்திரத்தை சிதைத்துள்ளது.




துட்டகாமினியைத் தன்னிகரற்ற வீரபராக்கிரமம் வாய்ந்தவனாகக் காட்டுவதே மகாவம்சத்தின் நோக்கம். தமிழ் மக்களுக்கு இந்த வகையில் மகாவம்சம் மூலம் அநீதி இழைக்கப்பட்டுள்ளது என இலங்கை, பாளி பௌத்த பல்கலைக்கழகப் பேராசிரியர் கும்புருகமுவே விஜிஹிமி குறிப்பிடுகிறார்.

விகாரமகாதேவியினதும் காக்கவண்ணதீசனதும் மூத்த மகன் காமினி அபயனாவான். இவன் தந்தையின் சொல்கேளாது இருந்தமையால் பிற்காலத்தில் துட்டகாமினி என அழைக்கப்பட்டான். அவனது தம்பியே சத்தாதீசனாவான். துட்டகாமினி கருவிலிருந்தே தமிழருக்கு எதிரானவனாக உருவாக்கப்பட்டான். விகாரமகாதேவி — தமிழருக்கெதிரான துவேஷத்தை அவனுக்கு ஊட்டி வளர்த்தாள். 'ஒரு முறை காக்கவண்ணதீசன் தன்னிரு பிள்ளைகளிடமும் மூன்று வேண்டுகோள் விடுத்தான். பௌத்த சங்கத்தினருக்கு எப்பொழுதும் பணிவாக இருக்கவேண்டும் என்றும் சகோதரர்கள் இருவரும் ஒருவரோடொருவர் சண்டை பிடிக்கக்கூடாதென்றும் தமிழர்களோடு போர் புரியக்கூடாதென்றும் கேட்டுக் கொண்டபோது, முதலிரு வேண்டுகோளையும் ஏற்ற சகோதரர்கள் மூன்றாவது கோரிக்கையை ஏற்கவில்லை. துட்டகாமினி விரைந்து எழுந்து சென்று கட்டிலில் கால்களை முடக்கிப்படுத்துக் கொண்டான். தாய் வினவியபோது, 'வடக்கே மகாவலி கங்கைக்கு அப்பால் தமிழரும் தெற்கே சமுத்திரமும் நெருங்கும் போது எப்படி நிமிர்ந்து படுக்கமுடியும்? என்றானென மகாவம்சம் கூறுகிறது.

### எல்லாள - துட்டகாமினி யுத்தம்

காக்க வண்ணதீசனின் மரணத்தின் பின்னர் துட்டகாமினி உருகுணையின் மன்னனானான். காக்கவண்ணதீசன் தயார்ப்படுத்தி வைத்திருந்த பெரும் சேனையுடன் தான் தயார்ப்படுத்திய வீரர்களுடனும் அனுராதபுரத்தினை நோக்கிப் படை நடாத்தினான். அவனுடன் திசமகராமை விகாரையைச் சேர்ந்த ஐந்நூறு பிக்குகளும் தாய் விகாரமகாதேவியும் கூடவே சென்றனர்.

துட்டகாமினி எல்லாளனுக்கு எதிரான யுத்தத்திற்கு இனத்தோடு மதத்தையும் முன் வைத்தான். 'நான் அரச போகங்களுக்காக இந்த யுத்தத்தில் இறங்கவில்லை. பௌத்த சாசனத்தின் உன்னதத்திற்காகவே போர் தொடுக்கிறேன்' என்ற கவர்ச்சிகரமான சுலோகத்தையே அவன் முன் வைத்தான். உண்மையில் எல்லாளனுக்கு எதிராக சமய ரீதியாகவோ இனரீதியாகவோ எதிர்ப்பு ஏற்பட எவ்வித அடிப்படையும் கிடையாது. நேர்மையும் பாரபட்சமின்மையும் கொண்ட நீதிமிக்க அரசன் அவன், எல்லாளன் போன்ற செங்கோல் அரசன் ஒருவனை முறியடிப்பது இலகுவல்ல. எனவே தான் அவன் அந்தக் கவர்ச்சிகரமான சுலோகத்தைப் பயன்படுத்தினான். பௌத்த பிக்குகள் யுத்தமொன்றுடன் தொடர்புபடும் சம்பவம் வரலாற்றில் இதுவே முதல் தடவை.

மகாவலிகங்கை மருங்கே எல்லாளனின் இராணுவத்தளங்கள் அமைந்திருந்தன. மகியங்கணையில் முதன் முதலாக தமிழ்ப்படையினருக்கும் துட்டகாமினியின் படைக்கும் சண்டை மூண்டது. அதனைத் தொடர்ந்து அம்பதீர்த்தம், சர்ப்பக் கோட்டை, அந்தர சொப்பம், நாளி சொப்பம், கச்சதீர்த்தம், கொத்த நகரம், நந்திக்கிராமம், விஜிதபுரம் முதலான தமிழரின் படையரண்களைத் தன் படை வலிமையாலும் தந்திரத்தாலும் துட்டகாமினி வெற்றி கொண்டான்.

(தொடரும்)

படிப்பகம்